<u>முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு</u>

<u>O.S.No. 174/2012</u>

2025 ஆம் வருடம் நவம்பர் மாதம் 3ம் தேதியன்று **DW.1** ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சண்முகம் | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**<u>சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வழக்கில் 3ம் பிரதிவாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு சான்றாவணங்களாக 16-04-1947 ம் தேதிய நாச்சிமுத்து கவுண்டர் (1ம் பிரதிவாதி) மற்றும் ராமாயம்மாள் (2-ம் பிரதிவாதி) ஆகியோர் பெயரில் உள்ள கிரைய ஆவணம் அசல் **பி.வா.சா.ஆ.1**. 14-06-1961 ம் தேதியில் நாச்சிமுத்து கவுண்டர் (1ம் பிரதிவாதி) மற்றும் மூன்று நபர்கள் (5 மற்றும் 6 பிரதிவாதிகள்) ஆகியோர்கள் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட புகைப்பட அசல் **பி.வா.சா.ஆ.2**. 27.061969 ம் தேதிய நாச்சிமுத்து கவுண்டர் (1ம் பிரதிவாதி) மற்றும் மூன்று நபர்கள் (5 மற்றும் 6 பிரதிவாதிகள்) ஆகியோர்கள் செய்து கொண்ட

பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட புகைப்பட அசல் **பி.வா.சா.ஆ.3**. 24-03-1992 என்னுடைய பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட புகைப்பட நகல் **பி.வா.சா.ஆ.4**. 24-03-1992 ம் தேதிய 4 ம் பிரதிவாதி T.S.செந்தில்குமார் பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட புகைப்பட நகல் **பி.வா.சா.ஆ.5**. 14-11.2011 ம் தேதியில் 4 ம் பிரதிவாதி T.S.செந்தில்குமார் பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட புகைப்பட நகல் **பி.வா.சா.ஆ.6**. 4 ம் பிரதிவாதி T.S.செந்தில்குமார் பெயரில் உள்ள சிட்டாவில் (பட்டா எண்.257) சான்றிட்ட புகைப்பட நகல் **பி.வா.சா.ஆ.7**. 4 ம் பிரதிவாதி T.S.செந்தில்குமார் பெயரில் உள்ள அடங்கலின் சான்றிட்ட புகைப்பட நகல் **பி.வா.சா.ஆ.8**. வரி இரசீதுகள் (10 எண்ணிக்கை) **பி.வா.சா.ஆ.9**. 1-ம் பிரதிவாதியின் வாக்காளர் அடையாள அட்டை அசல் **பி.வா.சா.ஆ.10**. 2 ம் பிரதிவாதியின் வாக்காளர் அடையாள அட்டை அசல் **பி.வா.சா.ஆ.11**. 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளின் குடும்ப அட்டை-அசல் **பி.வா.சா.ஆ.12.** 12-04-2012 குடிநீர் இணைப்பு ரசீது (எண்ணிக்கை-2) -அசல் **பி.வா.சா.ஆ.13**. 1 ம் பிரதிவாதியின் கரூர் வைசியா வங்கி, மேட்டுகடை கிளையின் வங்கி கணக்கு புத்தகம் -அசல் **பி.வா.சா.ஆ.14**. 26-02-1992 ம் தேதிய ரூ.100/- மதிப்புள்ள கிரைய ஆவணத்தைன் சான்றிட்ட புகைப்பட நகல் **பி.வா.சா.ஆ.15**. 05-06-1933 ம் தேதிய ரூ.100/- மதிப்புள்ள கிரைய ஆவணம் - அசல் **பி.வா.சா.ஆ.16**. 17-12-1947 ம் தேதிய ரூ.100/- மதிப்புள்ள கிரைய ஆவணம் - அசல் **பி.வா.சா.ஆ.17**. 07-06-1950 ம் தேதிள ரூ.1000/- மதிப்புள்ள கிரைய ஆவணம் - அசல் **பி.வா.சா.ஆ.18**. 17-06-1987 ம் தேதியில் என்னுடைய பெயருக்கு ராமாயம்மாள் (2-ம் பிரதிவாதி) எழுதி வைத்த பதிவு

செய்யப்பட்ட உயில் சாசனம் அசல் **பி.வா.சா.ஆ.19**. 20-06-1996 ம் தேதிய என்னுடைய பெயருக்கு நாச்சிமுத்து கவுண்டர் (எ) நாச்சியப்பன் (1-ம் பிரதிவாதி) எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் அசல் **பி.வா.சா.ஆ.20** ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன்.